**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ''சபை'' சபை மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் ''குழுமம்'' 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய எனது அவதானிப்புரைகளும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, சபையின் மற்றும் குழுமத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | தொடர்புடைய நியமங்களுடனான இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 79 (ஆ) பிரிவின் பிரகாரம் இருப்பின் மூலம் பேணப்பட்டு வரும் ஒதுக்கங்களின் தன்மை மற்றும் நோக்கம் தொடர்பில் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும் எனினும், | சபையின் ஒதுக்கங்கள் வேறு வேறாக அறிந்து கொள்ளப்பட்டு உரிமை மாற்றல் கூற்றில் வேறு வேறாக காட்டப்பட்டுள்ளது. சபையினால் வேறு ஒதுக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை | நியமங்களின் பிரகாரம் போதியளவு வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையினால் பேணப்பட்டு வரும் பங்கிலாப சமப்படுத்தல் ஒதுக்கம் மற்றும் வேறு ஒதுக்கங்கள் எனும் இரு ஒதுக்கங்கள் தொடர்பில் அவ்வாறான வெளிப்படுத்தல் இடம் பெற்றிருக்கவில்லை. | இயற்கணித இலாப / நட்டம் ஆகும். அதனை மேலும் வெளிப்படுத்த வேண்டுமாயின் எதிர் காலத்தில் வெளிப்படுத்த நடவடிக்ககை எடுக்கின்றோம். | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 73 (அ) பந்தியின் பிரகாரம் அசையாச் சொத்துக்களின் கொண்டுசெல்லும் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்குப் பயன்டுத்தப்பட்ட அளவீட்டு அடிப்படையினை (Measurement Base) நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், முதலில் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு பின்னர் வரும் காலப் பகுதிகளில் கொண்டுசெல்லும் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்காகப் (Measurement After Recognition) பின்பற்றப்பட்ட முறைமை (கிரய படிவத்தின் அல்லது மீள்மதிப்பீட்டு படிவத்தின்) நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 29 பந்திக்கு அமைய சபையினால் அதன் அசையாச் சொத்துக்கள் மொத்த செலவுப் படிவத்தின் அடிப்படையிலேயே அளவிடப்பட்டுள்ளன. மேலதிக வெளிப்படுத்தல் தேவைப்படுமாயின் எதிர் காலத்தில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்ககை எடுக்கின்றோம். | நியமங்களின் பிரகாரம் போதியளவு வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 1981 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் 8,213 தொழில் வழங்குனர்களிடமிருந்து 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட்டிருந்த மொத்தத் தொகையான ரூபா. 943.78 மில்லியன் சந்தாப் பணம் ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை சட்டத்தின் 16 ஆவது பிரிவின் பிரகாரம் அந்தந்த அங்கத்தவர்களின் தனிநபர் கணக்குகளில் வரவு வைக்கப்படாது தொழில் வழங்குனர்களின் கணக்குகளிலேயே தடுத்து | தொழில் வழங்குனர்களினால் தமது ஊழியர்களின் சந்தாப் பண விபரங்களை உள்ளடக்கி சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையினை சமர்ப்பித்திருக்காமை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் குறைபாடு காணப்பட்டதனால் இந்த தொகையினைப் பகிர்தல் தாமதமாகி உள்ளது. மேலும், தற்காலத்தில் நிலவும் கொவிட் தொற்று நிலைமையின் காரணமாகக் கள உத்தியோத்தர்களுக்கு குறித்த நிறுவனங்களுக்குச் சென்று இந்த அறிக்கையினைப் பெற்றுக் | சந்தாப் பணம் வரவு வைக்கப்பட வேண்டிய அங்கத்தவர்களைச் சரியாகவும் மற்றும் விரைவாகவும் இனங் கண்டு கொள்ளக் கூடிய வகையில் அங்கத்துவப் பணத்தினை அறவிடும் முறைமையினை முன்னேற்றுதல் |

| | | |
|---|---|---|
| வைக்கப்பட்டிருந்தது. உரிய அங்கத்துவக் கணக்குகளைக் கண்டறிந்து அந்தக் கணக்குகளுக்கு வரவு வைக்காது இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளதனால் குறித்த அங்கத்தவர்களுக்குத் தமது பணம் உரித்தற்று போவதற்கான ஆபத்து நிலவுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறு இருப்பினும், 2021 ஓகஸ்ட் 16 ஆம் திகதியில் இந்த மீதிகளில் ரூபா. 381.86 மில்லியன் தீர்க்கப்படும் என சபையின் தலைவரினால் எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கொள்ளல் மற்றும் / அல்லது திருத்திக் கொள்ளும் சந்தர்ப்பம் கிடைக்காது போயுள்ளது. | மற்றும் கண்டறியப்படாத சந்தாப் பணத்தினை விரைவாகக் கண்டறிவதற்குத் தேவையான நடவடிக்கைகளை வழங்குதல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1954 இன் 19 கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் | மேலதிக நேரத்திற்காக கொடுப்பனவு செய்கையில் ஒரு மணித்தியால மேலதிக நேரத்திற்கு பொதுவாக ஒரு மணித்தியாலத்திற்கான சம்பளத்தைப் போன்று ஒன்றரை மடங்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும், சபையினால் ஒரு மணித்தியால மேலதிக நேரத்திற்கு ஒன்றரை மணித்தியாலம் மற்றும் சனி / ஞாயிறு தினங்களில் 8 மணித்தியால மேலதிக நேரம் பூர்த்தியாவதுடன் ஒரு நாள் சம்பளத்தினையும் சேர்த்து மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய, மீளாய்வு ஆண்டில் சபையின் மேலதிக நேர செலவு | சபையின் மேலதிக நேரத்திற்காக ஊழியர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு நாட்கள் மட்டுமே அனுமதி வழங்குவதற்கும் மாதத்தின் முதல் மற்றும் கடைசி சனிக்கிழமைகளில் மட்டும் மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்துவதற்குமான விதியினைத் தயாரித்து அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடை மற்றும் அலுவலக சட்டத்தின் கீழ் இலங்கையின் தனியார் துறையினர் தவிர்த்து அனைத்து அரச சட்டபூர்வ நிறுவனங்களிலும் | கடை மற்றும் அலுவலக சட்டத்தின் கீழ் இயங்கும் நிறுவனமாக மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தொடர்பில் அந்த சட்டத்தின் ஒழுங்குவிதி முறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா. 13.53 மில்லியனாக இருந்தது. மேலம், சட்டத்தின் பிரகாரம் சபையின் உத்தியோகத்தர்கள் வாரத்திற்கு ஐந்தரை நாட்கள் சேவையாற்ற வேண்டியதுடன் வருடாந்த விடுமுறையாக 21 நாட்களுக்கு மட்டுமே இடமளிக்கப்பட்டுள்ள போதிலும் அதற்கு முரணாக சபையின் உத்தியோகத்தர்களுக்கு வருடாந்தம் 42 நாட்கள் விடுமுறை பெற்றுக் கொள்ளுவதற்கும் வாரத்தில் 5 நாட்கள் மட்டுமே சேவையாற்றவும் இடமளிக்கப்பட்டிருந்தது. | சுகயீன விடுமுறை 21 நாட்கள் உரித்தாக இருப்பதுடன் பல நிறுவனங்களில் சுகயீன விடுமுறைக்காக கொடுப்பனவு வழங்கும் முறையும் காணப்படுகின்றது என்பதனைக் குறிப்பிடுகின்றேன். | |
| (ஆ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் 2014 நவம்பர் 10 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் PE/IN/ETF/Gen கொண்ட கடிதம். | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியுடன் இணைந்து செயற்படும் சபையின் பதவியணியினருக்கு வீட்டுக் கடன் வழங்கும் யோசனை முறையின் கீழ் 4.2 சதவீத வட்டி வீதத்தின் கீழ் அந்தக் கடனைப் பெற்றுக் கொடுப்பதற்கு இணக்கப்பாட்டினைத் தெரிவித்திருந்த போதிலும் சபையினால் 4 சதவீத வட்டி வீதத்தின் கீழ் ரூபா 02 மில்லியன் வரையிலும் மீளாய்வு ஆண்டில் பதவியணியினருக்கு வீட்டுக் கடன் வழங்கப்பட்டிருந்தது. | 2021 மே 21 ஆம் திகதி வங்கியுடன ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புதிய உடன்படிக்கையின் பிரகாரம் கடன் வழங்குகையில் முதல் 02 மில்லியனுக்கு 4.2 சதவீத வட்டியும் மற்றும் மீதி மில்லியனுக்கு 7 சதவீத வட்டியும் அறவிடப்படும். | நிதி அமைச்சின் இணக்கப்பாட்டிற்கு அமைவாக வீட்டுக் கடனுக்கான வட்டி அறவிடப்படல் வேண்டும். |
| (இ) 2003 ஜூன் 02 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் பீஈடீ/12 கொண்ட அரச வணிக சுற்றறிக்கையின் 9.14.2 ஆம் பிரிவு. | சபையில் தற்போது செயற்படுத்தப்படும் நிதி மற்றும் நிர்வாக செயற்படு முறைமை கோவை திறைசேரியிடம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதை இலகுபடுத்துவதற்காக உள்ளக ரீதியில் தயாரிக்கப்பட்ட நிதி செயற்பாட்டு முறைமை பயன்படுத்தப்படுகின்றது. சபையின் நிதி மற்றும் நிர்வாக செயற்படு முறைமை கோவைகளுக்காக | திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைத்துள்ளதுடன், அவை இற்றைப்படுத்தப்பட்ட பின்னர் திறைசேரி அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஈ) 1994 ஜூன் 14 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 95 கொண்ட அரச வணிக சுற்றறிக்கை மற்றும் 2000 ஜனவரி 11 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் பீஎப்/பீஈ 5 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை. | திறைசேரியின் முறையான அனுமதியின்றி ஊழியர்களுக்கும் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கும் மேலதிகக் கொடுப்பனவு, ஊக்கக் கொடுப்பனவு மற்றும் வேறு வகையிலான நிதி பிரதிபலன்களும் வழங்கப்படலாகாது எனினும், சபையினால் மீளாய்வு ஆண்டில் உணவு கொடுப்பனவாக ரூபா. 11.34 மில்லியனும், மீதப்படுத்தப்பட்ட விடுமுறைக்கான கொடுப்பனவாக ரூபா. 25.02 மில்லியனும், வைத்திய செலவு மீள்நிரப்பலுக்காக ரூபா. 91.06 மில்லியனும், வீட்டுக் கடன் வட்டி மீள்நிரப்பலுக்காக ரூபா 10.48 மில்லியனுமாக மொத்தம் ரூபா 137.90 மில்லியன் தொகை திறைசேரியின் முறையான அனுமதியின்றி பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்தது. | சபையின் பதவியணியினருக்காக செலுத்தப்பட்ட உணவுக் கொடுப்பனவு, மீதமான விடுமுறை 14 நாட்களுக்கான கொடுப்பனவு மற்றும் வைத்திய செலவு மீள்நிரப்பல் என்பன சபையின் அனுமதியுடன் பெற்றுக் கொடுக்கப்பட்ட பிரதிபலன்களாகும். இது தொடர்பில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் இலக்கம் PE/IN/ETF/Gen கொண்டதும் 2014 நவம்பர் 10 ஆம் திகதியிடப்பட்டதுமான கடிதம் மூலம் ஊக்கக் கொடுப்பனவு தலைப்பின் கீழ் இந்த அனைத்துக் கொடுப்பனவுகளுக்காகவும் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதே போன்று குறித்த தினத்தின் பின்னர் பதவியணியினருக்கான வேறு புதிய கொடுப்பனவு அறிமுகப்படுத்தல் இடம் பெற்றிருக்கவில்லை என்பதையும் அது வரையிலும் இருந்த ஊக்கக் கொடுப்பனவு முறைமையே செயற்படுத்தப்பட்டுள்ள | சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அனைத்து கொடுப்பனவு முறைமைகளுக்கும் திறைசேரியின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

து என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

## 1.7 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

### 1.7.1 பெறப்பட வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல வருடங்களாக எல்கடுவ பெருற்தோட்ட கம்பனியிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டி இருக்கும் கடன் வட்டி தொகைகளில் இன்னமும் பெற வேண்டிய ரூபா. 9.39 மில்லியன் தொகை 2021 ஜுலை 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படாது இருக்கின்றது. | இந்த நிலுவைத் தொகையினை செலுத்துமாறு எல்கடுவ பெருந்தோட்ட கம்பனிக்கு பல கடிதங்கள் அனுப்பட்டு உள்ளன. இறுதியாக 2021 ஜுலை 12 ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பட்டுள்ளது. கொவிட் நிலைமைக்கு முகங் கொடுத்து கம்பனி நிதி சிக்கல்களுக்கு உட்பட்டு உள்ளது என அவர்கள் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளனர். இந்த நடவடிக்கைக்குரிய தொகையானது வட்டி செலுத்தப்படாமையினால் உருவானது என்பதனால் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொண்டு அந்தத் தொகையினை ஒரே தடவையில் அறவிடுவதற்கான வாய்ப்பு மிக அரிதாகும். | தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியுடன் இணைந்து செயற்படும் பதவியணியின் வீட்டுக் கடன் யோசனைத் திட்டத்திற்காக வங்கியுடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையின் படி உத்தியோகத்தர்களிடம் இருந்து மீள அறவிடப்பட்ட மூலதனத் தொகை மற்றும் வட்டித் தொகை 03 மாதத்திற்கு ஒரு தடைவ சபையிடம் மாற்றல் செய்தல் வேண்டும். அவ்வாறு இருக்க, அதற்கு முரணாக வங்கியினால் அந்தத் தொகை வருட இறுதியில் வைப்புக் | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி அவ்வப்போது தெரிவித்திருந்த போதிலும் அந்த கடனை மீள அறவிடல் 03 மாதத்திற்கு ஒரு தடைவ சபையிடம் மாற்றல் செய்யப்படவில்லை. 2021 மே 21 ஆம் திகதி தொடக்கம் செயற்படும் புதிய உடன்படிக்கைக்கு அமைய கடனை மீள அறவிடல் 03 மாதத்திற்கு ஒரு தடவை அறவிடுவதை முறையாக மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கணக்கு மீதியுடன் சேர்க்கப்பட்டு காட்டப்படுகின்றது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய 2020 ஆம் ஆண்டில் கடனை மீள அறவிடல் ரூபா 24.47 மில்லியனுக்கும் மற்றும் வட்டி அறவிடல் ரூபா 6.15 மில்லியனுக்கும் எதுவித பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கமைய மீளாய்வாண்டில் குழுமத்தின் நிதி பெறுபேறு ரூபா 28.017 மில்லியன் மற்றும் சபையின் நிதி பெறுபேறு ரூபா. 28,007 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு ஒப்பாக கடந்த ஆண்டில் குழுமத்தின் மற்றும் சபையின் இலாபம் முறையே ரூபா. 25,149 மில்லியன் மற்றும் ரூபா. 25,411 மில்லியன் ஆகும். அதற்கமைய குழுமத்தின் மற்றும் சபையின் நிதி பெறுபேறு முறையே ரூபா 2,868 மில்லியனாலும் மற்றும் ரூபா 2,596 மில்லியனாலும் அதிகரித்துக் காணப்பட்டது. மீளாய்வாண்டில் சபையின் வட்டி வருமானம் ரூபா 1,843 மில்லியனால் அதிகரித்திருந்தமையே மேற்கூறிய நிதி பெறுபேறின் அதிகரிப்பிற்கு முக்கியமான காரணமாக இருந்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத்தின் வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய சபைச் சட்டத்தின் 20(1) ஆம் பிரிவு மற்றும் 1988 இன் 47 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய சபை (திருத்தம்) சட்டத்தின் 7 ஆவது பிரிவின் மூலம் செய்யப்பட்ட திருத்தத்தின் பிரகாரம், சபையில் சுய தொழில் செய்வோரை பதிவு செய்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. ஆயினும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள 2,746,711 சுய தொழிலாளர்களில் நிதியத்தில் அங்கத்தவர்களாகப் பதிவு செய்து கொள்ளப்பட்டோரின் எண்ணிக்கை 42,694 அதாவது 1.55 சதவீதம் | 2019 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதுமையான வேலைத் திட்டத்தின் கீழ் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் புதிய அங்கத்தவர்கள் 1,614 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அந்த புதுமையான வேலைத் திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்கான திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கொரோனா தொற்று நிலையினால் செயற்படுத்த முடியாது போயுள்ளது. | சுய தொழில் செய்வோரை பதிவு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மட்டுமாக உள்ளதுடன் அதில் செயற்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 5,308 ஆகும். நிதியச் சட்டத்தின் மூலம் விசேடமாக தீர்மானிக்கப்பட்டுள்ள இந்தத் துறையினை முன்னேற்றுவதற்கு சபையினுள் வேறான பிரிவொன்றினைத் தாபிக்க செயல் திட்டத்தில் வழிவகை தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டில் புதிதாகப் பதிவு செய்யப்பட்டிருந்த எண்ணிக்கை 481 மட்டுமே ஆகும். | | |
| (ஆ) | 1995 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ள உரிமை கோரப்படாத மரண பிரதிபலன் ரூபா. 17.47 மில்லியனும் மற்றும் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் பேணப்பட்டு வரும் தடுத்து வைக்கப்பட்ட பிரதிபலன் ரூபா. 26.85 மில்லியனுமாக மொத்தம் ரூபா. 44.32 மில்லியன் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உரிய அங்கத்தவர்களை இனங் கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கத்தவர்களின் இறப்பின் பின்னர் அதன் அங்கத்தவர்களின் பிரதிபலனுக்காக உரிமை கோருவோர் பலர் இருக்கும் சந்தர்ப்பங்களில் அந்த உரிமை கோரும் அனைவரும் ஒரே நேரத்தில் வருகை தராமை மற்றும் ஒருசிலர் போதுமானளவு தகவல்களை சமர்ப்பிக்காமையால் அவர்களின் பங்கு சபைக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளவர்களின் பங்கினை மட்டும் செலுத்துதல் தற்காலத்தில் பின்பற்றப்பட்டு வரும் முறைமை ஆகும். | தீர்க்கப்படாது காணப்படும் உரிமை கோரப்படாத மரண பிரதிபலன், தடுத்து வைக்கப்பட்ட பிரதிபலன்களை வேறு வேறாக கண்டறிந்து தீர்ப்பதற்கு பொருத்தமான வேலைத் திட்டத்தினைத் தயாரித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (இ) | சபையினால் 2019 ஆம் ஆண்டில் மீதப்படுத்தப்பட்ட விடுமுறையின் அடிப்படையில் ரூபா. 18.15 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் தொற்று நோய் நிலைமையினால் வீட்டிலிருந்து வேலை செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்த 2020 ஆம் ஆண்டில் ரூபா 25.02 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், இதன் நியாயம் தொடர்பில் சிக்கல்கள் எழுந்துள்ளன. | ஊழியர்களினால் மீதப்படுத்தப்பட்ட சுகயீன விடுமுறைக்காக கொடுப்பனவு செய்தல் 30 வருடங்களக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்ட முறைமை என்பதுடன் அது மேலும் ஊழியர்கள் பெற்றுக் கொள்ளும் விடுமுறையினைக் குறைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையாக உள்ளது என்பதையும் குறிப்பிடுகின்றேன். | அங்கத்தவர்களின் சந்தாப் பணத்தினால் அமைக்கப்பட்ட நிதியத்தின் செலவுகளை மேற்கொள்ளுகையில் சிறந்த முகாமைத்துவம் மற்றும் திட்டத்துடனும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபையின் அங்கத்தவர்களுக்காக செயற்படும் வைத்திய நிவாரண யோசனை முறைக்காக அங்கத்தவர், வாழ்க்கைத் துணை மற்றும் அனைத்து தங்கி வாழ்வோருக்காகவும் ஒரு நபருக்கு மாதாந்தம் அறவிடப்படும் சந்தாப் ரூபா. 30 என 2011/10 ஆம் இலக்க நிர்வாக மற்றும் மனித வள சுற்றறிக்கையின் மூலம் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் 10 வருடத்தினுள் அந்தத் தொகையில் திருத்தம் இடம் பெற்றிருக்கவில்லை. ஆயினும், 2020 ஆம் ஆண்டுக்காக வைத்திய விலைப்பட்டியல் மீள்நிரப்பல் செலவு ரூபா. 92.57 மில்லியனாக உள்ளதுடன் அதற்கான அங்கத்தவ பங்களிப்பு ரூபா. 1.51 மில்லியன் அதாவது 1.6 சதவீதம் மட்டுமே ஆகும். அதற்கமைய மீதி தொகையான ரூபா. 91.06 மில்லியன் அதாவது 98.4 சதவீதம் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தது.<br><br>மேலும், இலக்கம் 2006/25 மற்றும் 2006/08/31 திகதியிடப்பட்ட சபையின் நிர்வாகம் மற்றும் மனித வள பிரிவினால் வழங்கப்பட்டிருந்த சுற்றறிக்கைக்கு அமைய ''ஊழியர்களில் தங்கி வாழும் வேலையற்ற திருமணமாகாத பிள்ளைகள்'' இந்த முறைமையின் கீழ் பிரதிபலனைப் பெற்றுக் கொள்ளத் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடப்படடுள்ள போதிலும், பிள்ளைகளுக்கான ஆகக் கூடிய வயதெல்லை தீர்மானிக்கப்பட்டிருக்காமை, பிள்ளைகள் வேலை செய்கின்றனரா இல்லையா என்பதனை பரீட்சிக்கும் முறைமை இல்லாமை, திருமணமானவரா திருமணமாகாதவரா என்பதனை பரீட்சிக்கும் முறைமை இல்லாமை போன்ற பலவீனங்களும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாது பெற்றுக் கொள்ளப்படும் சிகிச்சையின் கீழ் விசேட கருவிகளைப் பெற்றுக் கொள்ளுகையில் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை அதிகபட்சம் ரூபா. 5,000 மீள்நிரப்ப | எதிர் காலத்தில் சந்தாப் பணத்தினை அதிகரிப்பதற்கான வழிவகை எடுக்கப்படும். ஊழியர்களில் தங்கி வாழும் வேலையற்ற திருமணமாகாத பிள்ளைகளின் ஆகக் கூடிய வயது 25 வருடங்கள் என அண்மையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 21 வயதுக்கு கூடிய பிள்ளைகளுக்கு உரியதான வைத்திய நிவாரண கொடுப்பனவுகளின் போது கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் / உயர் கல்வி நிறுவனங்களின் சான்றிதழ் என்பன மூலம் வேலை செய்யவில்லை என்பதும் மற்றும் திருமணம் ஆகவில்லை என்பதும் உறுதி செய்யப்படும். விசேட கருவிகள் பெற்றுக் கொடுக்கையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை ரூபா. 5,000 வரையிலும் மீள் நிரப்பு செய்வதற்கான கணணி ஒழுங்கமைப்பினை இற்றைப்படுத்துவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கத்தவர்களின் சந்தாப் பணத்தில் அமைக்கப்பட்ட அங்கத்துவ நிதியத்தில் செலவுகளை மேற்கொள்ளுகையில் சிறந்த முகாமைத்துவம் மற்றும் திட்டத்துடனும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியும் என்பது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த விலைப்பட்டியல் தொடர்பில் விசேட குறிப்பு கணணி ஒழுங்கமைப்பில் உள்ளடக்கப்படாததோடு குறித்த நிபந்தனையை பரீட்சித்தல் இடம் பெற்றிருக்காமை போன்ற உள்ளக நிர்வாக பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (உ) | கூட்டுத்தாபன சட்டத்திற்கு அமைய சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சபைத் தலைவர் ஆவார். எவ்வாறு இருப்பினும், நிதி நடவடிக்கைகள் தொடர்பான நிறுவனமான சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் அதன் தலைவர் இருத்தல் வேண்டும் என்பதாக ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் 5(2) ஆம் பிரிவு திருத்தப்பட வேண்டும் என 2016 ஓகஸ்ட் 26 ஆம் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், 2020 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் கூட சட்டத்திற்குத் தேவையான திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் பிரதம நிறைவேற்று உத்தியேகத்தர் பதவிக்கு சபையின் பொது முகாமையாளரை நியமிக்கக் கூடிய வகையில் சட்டத்தினைத் திருத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைத்ததன் பின்னர் குறித்த யோசனையை அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்ளுவதற்காக விடயப் பொறுப்பு அமைச்சான நிதி அமைச்சின் செயலாளரிடம் அனுப்பப்பட்டுள்ளது. | குறித்த அனுமதிகளை விரைவாகப் பெற்றுக் கொண்டு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | சபையானது அரச பிணைகளில் நிதி முதலீடு செய்யும் முதல் தர நிறுவனமான போதிலும் பிணை ஏலங்களில் நேரடியாக விலைமனு சமர்ப்பிக்கும் வசதியினை (Direct Bidding Facility) இலங்கை மத்திய வங்கியிடம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. 2016 ஓகஸ்ட் 26 ஆம் திகதி இடம்பெற்ற பொது வணிகம் தொடர்பான செயற்குழு கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கியின் முதன்மை வாடிக்கையாளராக (Primary Dealer) பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலுமே அவ்வாறு இடம் பெற்றிருக்கவில்லை. | இந்த வசதிகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக மற்றும் பேணிச் செல்லுவதற்கு சபைக்கு அதிகளவில் செலவிட வேண்டி உள்ளது. ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர் மற்றும் பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் இந்த வசதியைப் பெற்றுக் கொள்ளுவதற்கு மத்திய வங்கியினால் தெரிவிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளையை செயற்படுத்துவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

-----------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் பட்டியலிடப்பட்ட 6 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த முறையே ரூபா. 31.41 மில்லியன், ரூபா 30.14 மற்றும் ரூபா. 49.10 மில்லியனான பங்குகள் முதலீடுகளுக்காக முறையே 2015, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் பங்கிலாப வருமானம் கிடைத்திருக்கவில்லை. | கம்பனிகளில் பங்குகளை முதலிட்டு பங்கிலாபம் பெறுதல் அல்லது பெறாமை அந்த நிறுவனங்களின் செயற்பாடுகளின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. அவ்வாறே அதற்கு உள் மற்றும் வெளிக் காரணிகள் தாக்கத்தை ஏற்படுத்தும். இதற்கமைய 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்று நிலைமையினால் பல நிறுவனங்களிலும் நாளாந்த நடவடிக்கைகளை நடாத்திச் செல்லுவதற்கு முடியாதிருந்ததுடன் பங்கிலாபத்தினை அறிவிக்க முடியாத நிலைமை உருவாகி இருந்தது. | அங்கத்தவர்களுக்கு ஆகக் கூடிய பலன்கள் கிடைக்கும் வகையில் முதலீட்டுத் தொகுதி முகாமைத்துவப்படுத் தப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் பட்டியலிடப்பட்ட 12 கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடுகளில் 2015 ஆம் ஆண்டில் சந்தைப் பெறுமதி ரூபா. 902.71 மில்லியனாக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் அந்தப் பங்குகள், பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் சபையின் முதலீட்டு நட்டத்தினைக் குறைத்துக் கொள்ளுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் அந்தப் பங்குகளின் சந்தைப் பெறுமதி ரூபா. 553.10 மில்லியன் வரையிலும் வீழ்ச்சியடைந்திருந்தது. | இந்த நிறுவனமும் பங்குச் சந்தையில் பதிவு செய்யப்பட்ட முதல் தர நிறுவனம் என்பதனால் அவற்றின் சந்தை விலை உண்மையான செலவு மிகக் கூடிய பெறுமதியினை பெறுமிடத்து விற்பனை செய்து இலாபமடைய எதிர்பார்க்கின்றோம். இந்த அனைத்து முதலீடுகளும் நீண்ட கால முதலீட்டு தொகுதியினுள் உள்ள நிறுவனமாகும். | அங்கத்தவர்களுக்கு ஆகக் கூடிய பலன்கள் கிடைக்கும் வகையில் முதலீட்டுத் தொகுதி முகாமைத்துவப்படுத் தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையினால் மூன்று அலகு பொறுப்பு நிதியங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் நாமல் வர்தன நிதியத்தில் 2020 ஆம் ஆண்டில் 450,000 அலகுகள் மீதியாகும். இது அதிகரிப்பு நிதியமாக இருப்பதனால் பங்கிலாபம் வழங்கல் நிச்சயமாக இடம் பெறாது என்பதால் 2020 ஆம் ஆண்டிற்கு பங்கிலாபம் கிடைத்திருக்கவில்லை. நாமல் வர்தன நிதியத்தின் அலகொன்றின் சந்தைப் பெறுமதி 2020 ஆம் ஆண்டில் அதிகரித்திருந்த போதிலும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நிதியத்திற்கு நிதி நட்டம் ஏற்பட்டுள்ளது என்பது அதன் நிதிக் கூற்றுகளைப் பரீட்சிக்கையில் அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த நிதியத்தின் நிகர சொத்துக்களின் (Net assets attributable to unit holders) வீழ்ச்சி அதாவது 2017 ஆம் ஆண்டில் ரூபா. 703 மில்லியனாக இருந்த நிகர சொத்துக்களின் பெறுமதி 2020 ஆம் ஆண்டில் ரூபா. 350 மில்லியன் வரையிலும் வீழ்ச்சியடைந்திருந்ததால் இந்த முதலீட்டில் ஆபத்தான நிலைமையினை அவதானிக்க முடிந்துள்ளது. | அலகு பொறுப்பு முதலீடுகளில் நாமல் வர்தன நிதியத்தின் முதலீட்டில் 55 சதவீதத் தொகை படிப்படியாக விற்பனை செய்யப்படடுள்ளது. தற்போது மீதமாக இருக்கும் 450,000 அலகுகள் சந்தையில் அனுகூலமான நிலை உருவானவுடன் மூலதன இலாபத்துடன் விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அங்கத்தவர்களுக்கு ஆகக் கூடிய பலன்கள் கிடைக்கும் வகையில் முதலீட்டுத் தொகுதி முகாமைத்துவப்படுத் தப்பட வேண்டும். |
| (ஈ) | ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளாது ஊழியர் நம்பிக்கை நிதிய சபையில் மட்டும் பதிவு செய்யும் தொழில் வழங்குனர்களுக்காக சபையினால் தற்காலிக பதிவு எண் வழங்கப்பட்டு போலி (Dummy) தொழில் வழங்குனராக பதிவு செய்துகொள்ளும் தொழில் வழங்குனர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் சந்தாப் பணம் ‘X’ எனும் பெயரில் தற்காலிகக் கணக்குகளில் பேணப்பட்டு வரும். அதற்கமைய குறித்த | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் தொழில் திணைக்களம் ஊழியர் சேமலாப நிதியத்துடன் மாதாந்தம் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் பரிமாற்ற செயற்பாடு இடம் பெறுவதுடன், அந்த தகவல்களை அடிப்படையாக் கொண்டு போலி இலக்கத்தினை நிலையான தொழில் வழங்குனர் இலக்கங்களுக்கு மாற்றுதல் மேற்கொள்ளப்படும். மேலும், இந்த சபையின் | போலி இலக்கத்தினை நிலையான தொழில் வழங்குனர் இலக்கங்களுக்கு மாற்றுவதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டமொன்றினை செயற்படுத்துவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | |
|---|---|
| அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைக்காது 'X' கணக்குகளில் (AX தொடக்கம் XX வரையிலும்) 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்படும் மீதியானது ரூபா. 317,699,475 ஆகும். இந்த போலி தொழில் வழங்குனர்கள் சபையின் உண்மையான தொழில் வழங்குனர்களாகப் பதிவு செய்து கொள்ளுவதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காத காரணத்தால் அந்தக் கணக்கில் பேணப்பட்டு வரும் சந்தாப் பணம் அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட முடியாது காணப்படுகின்றது | பிராந்திய அலுவலகங்களினால் நிறுவன பரீட்சிப்பு மேற்கொள்ளுகையில் பெற்றுக் கொள்ளும் நிலையான தொழில் வழங்குனர் இலக்கத்திற்கு அமைய தொழில் வழங்குனர்களினால் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்யப்பட்ட பின்னர் அந்தத் தகவல்கள் எங்களிடம் தெரிவிக்கப்படும் சந்தர்ப்பம் இருப்பதுடன் அப்போது போலி இலக்கத்தின் கீழ் செலுத்தப்படும் சந்தாப் பணம் நிலையான தொழில் வழங்குனர் இலக்கங்களுக்கு மாற்றுதல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். |